*கவனிக்க.- 2019.01.18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2108 - 2019 ජනවාරි මස 25 වැනි සිකුරාදා - 2019.01.25

*2108 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பதவிகள் - வெற்றிடம் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 171 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 170 | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2019, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

169- B81488 - 5,403 (2019/01)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## ஊவா மாகாண மாகாண சபை

*1995 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஊவா மாகாண நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச் சட்டம் 11 (1) ஆம் கூற்றின் கீழ் விதிகள்*

*ஊவா மாகாண மாகாண சபையின் 1995 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கம் உடைய நிதி (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டத்தின் 11 (1) கூற்றிற்கமைய எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி ஊவா மாகாண சபையின் முதலமைச்சரும், நிதியும் திட்டமிடலும், சட்டமும் சமாதானமும், கல்வி, மாகாண உள்ளூராட்சி, காணி, மின்சக்தியும் வலுசக்தியும், நிர்மாணத்துறை, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சருமான தொன் ஆதர் சாமர சம்பத் தசநாயக்க ஆகிய நான் கீழ் குறிப்பிட்ட கனிப்பொருட்களுக்கான வரி வீதத்தை 2019.01.01 ஆந் திகதியில் இருந்து செலுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன்.*

*கனிப்பொருட்கள் வரி - மொத்த பொருட் சுழற்சி பெறுமதியில் 0.5 சதவீதம்.*

*தொன் ஆதர் சாமர சம்பத் தசநாயக்க,*
*முதலமைச்சரும், நிதியும் திட்டமிடலும், சட்டமும் சமாதானமும்,*
*கல்வி, மாகாண உள்ளூராட்சி, காணி, மின்சக்தியும் வலுசக்தியும்,*
*நிர்மாணத்துறை, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்*
*ஊவா மாகாண மாகாண சபை.*

*பதுளை.*
*2018, திசெம்பர் 28.*

*1 - 486*

---

## மேல் மாகாண மாகாண சபை

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 2 (2) ஆம் வாசகத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அறிவித்தல்*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க களியாட்டவரி (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்டவரிக்கட்டளைச்சட்டத்தின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட களியாட்ட செயற்பாடுகளுக்காக அறவிடப்படுகின்ற நுழைவுக் கட்டணத்தில் 10% னை களியாட்ட வரியாக விதித்து அறவிடுவதற்கும் அதே போன்று நகர சபையின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள திரை அரங்குகளில் காண்பிக்கப்படுகின்ற திரைப்படக் கண்காட்சிகளுக்கான நுழைவுக்கட்டணத்தில் 7.5 % னை களியாட்ட வரியாக விதித்து அறவிடுவதற்கும் களியாட்ட வரிக் கட்டளைச்சட்டத்தின் 2 (1) ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மஹரகம நகர சபையில் 2018.07.19 ஆம் திகதிய சபையில் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணைகளை கௌரவ முதல் அமைச்சர் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை, நீதி மற்றும் சமாதானம், மாகாண சபை மற்றும் மாகாண நிருவாகம், பொருளாதார அபிவிருத்தி, மின்சாரம் மற்றும் எரிசக்தி, சுற்றாடல் விவகாரங்கள், நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை அலுவல்கள் அமைச்சர் இசுர தேவப்பிரிய ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் இலக்க வாசகத்துடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*இசுர தேவப்பிரிய,*
*முதல் அமைச்சரும், நிதி மற்றும்*
*திட்டமிடல், பொறியியல் சேவை, நீதி மற்றும்*
*சமாதானம், மாகாண சபை மற்றும் மாகாண நிருவாகம்,*
*பொருளாதார அபிவிருத்தி, மின்சாரம் மற்றும்*
*எரிசக்தி, சுற்றாடல் விவகாரங்கள், நீர்வழங்கல் மற்றும்*
*வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை அலுவல்கள் அமைச்சரும்,*
*மேல் மாகாண மாகாண சபை.*

*இலக்கம் 204,*
*டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை .*
*2018, திசெம்பர் 24.*

*1 - 580*

## வடமேல் மாகாண மாகாண சபை

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் உடைய பொழுது போக்கு வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கம் உடைய பொழுதுபோக்கு வரி (திருத்தம்) சட்டத்தின் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய பொழுது போக்கு கட்டளைச் சட்டத்தில் பிரசுரிக்கப்பட்ட பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய நுழைவுக் கட்டணத்தின் 10% ஆன பொழுதுபோக்கு வரியை அறவிடுவதற்கு 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட பொழுது போக்கு வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(1) வாக்கியத்தில் உள்ளவாறு விதிகளுக்கு ஏற்ப 2018.09.20 ஆந் திகதியையுடைய குருநாகல் பிரதேச சபை கூட்டத்தில் தீர்வு இல. 21 இன் கீழ் அங்கீகரிக்கப்பட முன்னர் குருநாகல் பிரதேச சபையில் அதிகாரங்களை செயற்படுத்திய கடமை காரியங்களை நடாத்திய குருநாகல் பிரதேச சபையின் செயலாளர் டீ. டீ. விக்கிரமசிங்க என்பவரால் பொழுதுபோக்கு வரி சம்பந்தமாக எடுக்கப்பட்ட 2016.11.15 ஆந் திகதியுடைய இல. 2002 ஐக் கொண்ட தீர்மானத்தை வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் கணபதிபிள்ளை கதிரவேல்பிள்ளை லோகேஸ்வரன் ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட பொழுதுபோக்கு வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(2) வாக்கியத்தின் விதிகளுக்கு அமைய எனக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் பிரகாரம் அனுமதிக்கப்பட்டதென இத்தால் அறியத்தருகின்றேன்.*

*மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விடயம் சம்பந்தமாக மும்மொழியினுள் ஏதும் பாரபட்சம் இருந்தால் அதில் சிங்கள மொழியிலான நகலை கவனத்தில் கொள்க.*

கே. சீ. லோகேஸ்வரன்,
ஆளுநர்,
வடமேல் மாகாணம்,

வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகம்,
குருநாகல்,
2018, திசெம்பர் 12.

01 - 645

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

**வடமேல் மாகாண பாடசாலைகளில் காணப்படுகின்ற இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்பின் வெற்றிடங்களுக்காக மாவட்ட அடிப்படையில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018**

மேலே கூறப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பில் 2018.12.14 ஆம் திகதிய 2012 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பின்வரும் பந்திகள் திருத்தப்படுகின்றன.

பந்தி 5.3. வயது :
2019.01.14 ஆந் திகதிக்கு 21 வயதுக்கு குறையாதவராகவும் 43 வயதைவிட அதிகரிக்காதவராகவும் இருக்க வேண்டும்.

பந்தி 7.4.1 : ஏற்கனவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரராயின் தனது தொழில் தொடர்பில் நிறுவனத் தலைவரால் வழங்கப்பட்ட சேவைச் சான்றிதழை முன்வைக்க வேண்டும். அதற்கு மேலதிகமாக பிரதேச செயலாளரின் கையொப்பத்துடனான கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட தொழில் தொடர்பான சான்றிதழ் ஒன்றும் நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்கப்பட வேண்டும்.

பந்தி 09 ஆட்சேர்ப்பு முறை :

(அ) வடமேல் மாகாண அரச சேவையின் ஆசிரியர் சேவை யாப்பில் ஏற்பாடுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதுடன், பட்டம் ஒன்றை குறைந்த பட்ச தகைமையாகக் கொண்ட தொழில் ஒன்றில் ஈடுபட்டிருக்கும் விண்ணப்பதாரி ஒருவரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவது தொழிலற்ற மற்றும் பட்டம் ஒன்று தகைமையாகக் கொள்ளப்படாத தொழில் ஒன்றில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட பின்னராகும்.

(ஆ) உரிய மொழி மூலங்களில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு, சமய பாடங்கள் மற்றும் சமயம் தொடர்பான பாடங்களுக்கு மதகுருமார்களாக விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

பந்தி 11.1 (இ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 2019.02.08 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

02. மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள 46 பாடங்களுக்கு மேலதிகமாக 47 தொடக்கம் 51 வரை உப பட்டியல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் சேர்க்கப்படுகின்றது.

03. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.02.08 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்ட போதிலும் 2018.12.14 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு 2019.01.14 ஆந் திகதிக்கு சகல தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

04. இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2102 ஆம் இலக்கம் கொண்ட 2018.12.14 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவுள்ளதாக இருக்கும்.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் நியமனத்திற்கு ஏற்ப,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2019, சனவரி 17.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வெற்றிடமாகியுள்ள பாடங்களின் படி (√) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ளது. அக் குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள பாடங்களுக்கு மாத்திரம் அந்தந்த மாவட்டங்களில் உரிய மொழியினால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

| பாடங்கள் | பாட இலக்கம் | கல்வித் தகைமைகள் | வெற்றிடங்கள் குருநாகல் | | | வெற்றிடங்கள் புத்தளம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| கொரியன் | 47 | மொத்தக் கல்விக் காலத்தினுள் கொரியன் மொழியினை பிரதான பாடமாக கற்றுள்ள கலைப்பட்ட சாதாரண பட்டம் அல்லது விசேட பட்டம் | √ | – | – | √ | – | – |
| யப்பான் | 48 | மொத்தக் கல்விக் காலத்தினுள் ஜப்பான் மொழியினை பிரதான பாடமாக கற்றுள்ள கலைப்பட்ட சாதாரண பட்டம் அல்லது விசேட பட்டம் | √ | – | – | √ | – | – |
| பிரான்ஸ் | 49 | மொத்தக் கல்விக் காலத்தினுள் பிரான்ஸ் மொழியினை பிரதான பாடமாக கற்றுள்ள கலைப்பட்ட சாதாரண பட்டம் அல்லது விசேட பட்டம் | √ | – | – | √ | – | – |
| ஜேர்மன் | 50 | மொத்தக் கல்விக் காலத்தினுள் ஜேர்மன் மொழியினை பிரதான பாடமாக கற்றுள்ள கலைப்பட்ட சாதாரண பட்டம் அல்லது விசேட பட்டம் | √ | – | – | √ | – | – |
| சீனா | 51 | மொத்தக் கல்விக் காலத்தினுள் சீன மொழியினை பிரதான பாடமாக கற்றுள்ள கலைப்பட்ட சாதாரண பட்டம் அல்லது விசேட பட்டம் | √ | – | – | √ | – | – |

02-770

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.